செய்தி வெளியீடு எண்.481/2010 நாள்: 3.7.2010

வேலூர் மாவட்டத்தில் ஊரக/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலியாகவுள்ள பதவியிடங்களுக்கு எதிர்வரும் 22.7.2010 ஆம் தேதியன்று உள்ளாட்சி தற்செயல் தேர்தல் நடைபெறவுள்ளது என சென்னை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் வாயிலாக சட்டபூர்வ ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு காலியாகவுள்ள பதவியிடங்களுக்கான தேர்தல் அட்டவணை பின்வருமாறு

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகளின் வகைபாடு | நகராட்சி/பேரூராட்சி விவரம் | தேர்தல் நடைபெற உள்ள காலி பதவியிட விவரம் | வார்டு எண் |
|---|---|---|---|---|
| 1. | நகர்ப்புறம் | நகராட்சி | குடியாத்தம் நகராட்சி வார்டு உறுப்பினர் | 14 ஆவது வார்டு |
| 2. | ″ | மூன்றாம் நிலை நகராட்சி | மேல்விஷாரம் மூன்றாம் நிலை நகராட்சி வார்டு உறுப்பினர் | 4 , 5 மற்றும் 6-ஆவது வார்டுகள் |
| 3. | ″ | பேரூராட்சி | பென்னாத்தூர் பேரூராட்சி வார்டு உறுப்பினர் | 3 ஆவது வார்டு |

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகளின் வகைபாடு | ஊரக பகுதி விவரம் | தேர்தல் நடைபெற உள்ள காலி பதவியிட விவரம் | வார்டு எண் |
|---|---|---|---|---|
| 1. | ஊரகப் பகுதி | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | வாலாஜா ஊராட்சி ஒன்றிய மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | 29ஆவது வார்டு |
| 2. | ″ | ஒன்றியக்குழு உறுப்பினர் | சோலையார்பேட்டை ஒன்றியக்குழு உறுப்பினர் | 2ஆவது வார்டு |
| 3. | ″ | சிற்றூராட்சித் தலைவர் | காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் தப்பூர் சிற்றூராட்சித் தலைவர் | -- |
| 4. | ″ | ″ | நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் அம்பலூர் சிற்றூராட்சித் தலைவர் | -- |
| 5. | ″ | ″ | திமிரி ஊராட்சி ஒன்றியம் 1.செய்யாத்துவண்ணம் சிற்றூராட்சித் தலைவர் 2.கலவைப்புத்தூர் சிற்றூராட்சித் தலைவர் | -- |

மேலும், வேலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில், **வேலூர், காட்பாடி மற்றும் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம் நீங்கலாக,** ஏனைய 17 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பின்வரும் சிற்றூராட்சிகளில் 37 சிற்றூராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான காலி பதவியிடங்களுக்கும் **22.7.2010ஆம்** தேதியன்று தற்செயல் தேர்தல் நடைபெறவுள்ளது.

| வ. எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | காலி பதவியிடம் ஏற்பட்டுள்ள சிற்றூராட்சி எண்ணிக்கை | காலி பதவியிட சிற்றூராட்சி வார்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஆலங்காயம் | 2 | 2 |
| 2. | அணைக்கட்டு | 1 | 1 |
| 3. | ஆற்காடு | 1 | 1 |
| 4. | குடியாத்தம் | 4 | 4 |
| 5. | சோலையார்பேட்டை | 2 | 2 |
| 6. | கீ.வ.குப்பம் | 3 | 3 |
| 7. | கந்திலி | 2 | 2 |
| 8. | கணியம்பாடி | 1 | 1 |
| 9. | காவேரிப்பாக்கம் | 5 | 5 |
| 10. | மாதனூர் | 2 | 2 |
| 11. | நெமிலி | 2 | 2 |
| 12. | பேர்ணாம்பட்டு | 2 | 2 |
| 13. | சோளிங்கர் | 1 | 1 |
| 14. | திமிரி | 3 | 3 |
| 15. | திருப்பத்தூர் | 5 | 5 |
| 16. | வாலாஜா | 1 | 1 |
| | **ஆக மொத்தம்** | 37 | 37 |

**இத்தேர்தல்களுக்கான வேட்புமனு தாக்கல் 03.07.2010 ஆம் தேதி முதல் துவங்கி 10.07.2010 ஆம் தேதி வரை,( ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர) காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை வேட்பு மனுக்கள் பெறப்படும். வேட்பு மனுக்கள் பரிசீலனை 12.07.2010 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். வேட்பு மனுக்கள் திரும்பப் பெற கடைசி நாள் 14.07.2010 அன்று பிற்பகல் 3.00 மணி வரை ஆகும்.**

22.7.2010 ஆம் தேதியன்று காலை 7.00 மணிக்கு வாக்குப்பதிவு துவங்கி அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு முடிவுறும். வாக்கு எண்ணிக்கையானது, 24.7.2010 ஆம் தேதியன்று நடைபெறும். தேர்தல் நடவடிக்கைகள் யாவும் 25.7.2010 ஆம் தேதியன்று நிறைவு பெறும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்திகுறிப்பில் தகவல் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வேலூர் - 9.**